## வெம்பக்கோட்டை அகழாய்வில் கிடைத்த பொருட்களுக்கான கண்காட்சி திறப்பு

**சாத்தூர்**: வெம்பக்கோட்டை அகழாய்வுப் பணிகளில் கிடைத்த பொருட்களை காட்சிப்படுத்துவதற்கான கண்காட்சி அரங்கை அமைச்சர்கள் இன்று திறந்து வைத்தனர்.



விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே உள்ள வெம்பக்கோட்டை விஜயகரிசல்குளம் மேட்டுக்காட்டில் கடந்த ஆண்டு மார்ச் 16ஆம் தேதி முதலாம் கட்ட அகழாய்வுப் பணிகள் தொடங்கப்பட்டன. 16 குழிகள் தோண்டப்பட்டு அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. கடந்த செப்டம்பர் மாதம் இறுதி வரை இப்பணிகள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து 2ம் கட்ட அகழாய்வுப் பணிகள் கடந்த மாதம் தொடங்கின.

இந்த அகழாய்வில், நுண் கற்காலம் முதல் வரலாற்று தொடக்க காலம் வரை இப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட பானை ஓடுகள் அதிகளவில் கண்டெடுக்கப்பட்டன. அதோடு, நுண்கற்கால கருவிகள், பல வகையான பாசிமணிகள், சுடு மண்ணாலான காதணிகள், பொம்மைகள், சங்ககால வளையல்கள், மோதிரங்கள், சில்லு வட்டுகள், இரும்பு உருக்கு கழிவுகள், சங்கு வளையல்கள் என 3,254 பழங்காலப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன. தொடர்ந்து நடைபெற்றுவரும் 2ம் கட்ட அகழாய்விலும் ஏராளமான பழங்காலப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இப்பகுதியில் அகழாய்வு மூலம் கண்டெடுக்கப்பட்டுள்ள பழங்கால பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்காக கண்காட்சி அரங்கம்

அமைக்கப்பட்டுள்ளது. அரங்கின் திறப்பு விழா இன்று காலை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன் தலைமை வகித்தார். வருவாய்த்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பங்கேற்று அரங்கை திறந்து வைத்து தொல்பொருள் கண்காட்சியை தொடங்கி வைத்தனர்.

இக்கண்காட்சியில், வெம்பக்கோட்டை பகுதியில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழங்கால பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் அகழாய்வு நடைபெறும் இடத்தை நேரடியாகப் பார்வையிடுவதோடு, இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள பழங்காலப் பொருள்களையும் அதன் சிறப்புகளையும் அறிந்துகொள்ளச் செய்யும் வகையில் இந்த கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா, எம் எல் ஏக்கள் அசோகன் ரகுராமன், தொல்லியல் துறை இயக்குனர் காந்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருத்தங்கலில் முற்கால பாண்டியர் நடுகல் சிற்பம் கண்டுபிடிப்பு



திருத்தங்கல் அருகே கண்டெடுக்கப்பட்ட முற்கால பாண்டியர் நடுகல் சிற்பம்

**சிவகாசி:** மாவட்ட ஆட்சியர் அளித்த தகவலின் பேரில் சிவகாசி அருகே திருத்தங்கல் நின்ற நாரயண பெருமாள் கோயில் மேல மாட வீதியில் முற்கால பாண்டியர் காலத்து நடுகல் சிற்பம் மற்றும் வட்டெழுத்து கல்வெட்டை மாநகராட்சி அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

திருத்தங்கல் நின்ற நாராயண பெருமாள் கோயில் மேல மாட வீதியில் பாறையில் வெட்டப்பட்ட புடைப்பு சிற்பத்துடன் கூடிய முற்கால பாண்டியர் காலத்து நடுகல் சிற்பம் மற்றும் தலைகீழாக உள்ள வட்டெழுத்து கல்வெட்டு ஆகியவை 1922-ம் ஆண்டில் தொல்லியல் துறையால் ஆவணப்படுத்தப்பட்டது. அதை மீண்டும் 2005-ம் ஆண்டு தொல்லியல் துறை பதிவு செய்துள்ளது.

ஆனால் தற்போது சிற்பம் மண்ணில் புதைந்து மறைந்த நிலையில் உள்ளதாக திருங்கல் பகுதியைச் சேர்ந்த தொல்லியல் ஆய்வாளர் ஆர்.பாலசந்திரன் மாவட்ட ஆட்சியருக்கு தகவல் அளித்தார். இதையடுத்து மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன், சிற்பம் உள்ள இடத்தை கண்டறிய மாநகராட்சி ஆணையர் சங்கரனுக்கு உத்தரவிட்டார். இதையடுத்து ஆணையர் என்.சங்கரன், மாநகராட்சி அலுவலர்களுடன் நேரடியாக சென்று மேல மாட வீதி பகுதியில் நடுகல் சிற்பம் உள்ள இடத்தை தேடினார்.



பல இடங்களில் தேடிய பிறகு, பெருமாள் கோயில் மண்டபம் அருகே மண்ணில் புதைந்து இருந்த நடுகல் சிற்பம் மற்றும் வட்டெழுத்து கல்வெட்டு ஆகியவற்றை கண்டறிந்து மீட்டனர். அந்த கல்வெட்டில் போரில் வீரமரணம் அடைந்த வீரருக்கு ரத்தக்காணியாக நிலம் வழங்கிய தகவல் இடம் பெற்றுள்ளது. மேலும் அப்பகுதியில் வேறு ஏதும் தொல்லியல் சான்றுகள் உள்ளதா என்பதை கண்டறிவதற்காக தோண்டும் பணி நடைபெற்று வருகிறது.

# குப்பையில்லா நகரங்களை உருவாக்க 4 விழிப்புணர்வு குறும்படங்கள் - அமைச்சர் கே.என்.நேரு வெளியிட்டார்



**சென்னை**: குப்பையில்லா நகரங்களை உருவாக்க, 4 விழிப்புணர்வுக் குறும்படங்களை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு வெளியிட்டார்

திடக்கழிவு மேலாண்மை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வு குறும்படங்களை, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமைச் செயலகத்தில் நேற்று வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் சிவ்தாஸ் மீனா, சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி, நகராட்சி நிர்வாக இயக்குநர் பா.பொன்னையா, நகராட்சி நிர்வாகஇணை ஆணையர் பி.விஷ்ணுசந்திரன், திரைப்பட தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர் டி.சிவா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தூய்மையான மக்கள் இயக்கம்:** இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கே.என்.நேரு பேசியதாவது: நகரங்களை தூய்மையாக்குவதற்கும், குப்பையில்லா நகரங்களை உருவாக்குவதற்கும் 2022 ஜூன் 3-ம் தேதி தூய்மையான மக்கள் இயக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்த விழிப்புணர்வு இயக்கத்தை மேலும் மக்களிடம் கொண்டு சென்று, விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால், எனது குப்பை எனதுபொறுப்பு - வீடுகளில் இருந்துபெறும் குப்பையை தரம் பிரித்துக் கொடுத்தல் குறித்து மக்களுக்கு எடுத்துரைத்தல், எனது இடம் எனது பொறுப்பு – காலி மனைகளில் குப்பை கொட்டாது இருத்தல் குறித்து விளக்குதல், பாவம் செய்யாதிரு – அடுக்குமாடிக் குடியிருப்புகளில் இருந்து குப்பையைக் கீழே வீசாமல் இருத்தல், உங்கள் குப்பைஉங்கள் பொறுப்பு – பொது இடங்களில் இருக்கும் குப்பைத் தொட்டியை முறையாகப் பயன்படுத்தல் என 4 வகையான தலைப்புகளில்தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வுகுறும்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் மக்களைச் சென்றடையும் வகையில் இப்படங்கள் ஒளிபரப்பப்படும்.

**கழிப்பறை வசதிகள்:** தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நகரங்களாக 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன.அனைவருக்கும் கழிப்பறைகளை வழங்குவதன் மூலம், அனைத்து நகர்ப்புறங்களையும் தொடர்ந்து ‘திறந்தவெளி மலம் கழிக்காத நகரங்களாக’ நீடித்து நிலைக்கச் செய்ய அரசு உறுதி மேற்கொண்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் நகர்ப்புற உள்ளாட்சிகளில் தேவைக்கேற்ப தனிநபர் வீட்டுக் கழிப்பறைகள், சமுதாயக் கழிப்பறைகள், பொதுகழிப்பறைகள், திடக்கழிவு மேலாண்மை வசதிகள், பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை வசதிகள்செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

## மகேந்திரகிரியில் இஸ்ரோ மேற்கொண்ட செமி-கிரையோஜெனிக் இன்ஜின் சோதனை வெற்றி



**பெங்களூரு**: தமிழகத்தின் மகேந்திரகிரியில் இஸ்ரோவின் ராக்கெட் இன்ஜின் பரிசோதனை மையம் உள்ளது. இங்கு செமி-கிரையோஜெனிக் இன்ஜின் பரிசோதனை மையம் புதிதாக தொடங்கப்பட்டது.

இங்கு 2000 கே.என் (கிலோநியூடன்) திறனுள்ள செமிகிரையோஜெனிக் இன்ஜின் நேற்று வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டதாக பெங்களூருவில் உள்ள இஸ்ரோ தலைமையகம் தெரிவித்தது.

இந்த 2000 கே.என் இன்ஜின் திரவ ஆக்ஸிஜன் மற்றும் மண்ணெண்ணெய் மூலம் இயங்கக் கூடியது. இந்த வகை இன்ஜின்கள் எதிர்காலத்தில் அனுப்பப்படும் ராக்கெட்டுகளில் பயன்படுத்தப்படவுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்த இன்ஜினில் உள்ள குறைந்த அழுத்தம் மற்றும் அதிக அழுத்தம் கொண்ட டர்போ பம்ப்புகள், காஸ் ஜெனரேட்டர், கட்டுப்பாட்டு கருவிகளின் செயல்பாடுகள் நேற்று முதல் முறையாக பரிசோதனை செய்யப்பட்டன. இந்த இன்ஜின் வடிவமைப்பை இஸ்ரோவின் திரவ எரிபொருள் இன்ஜின் மையம் (எல்பிஎஸ்சி) உருவாக்கியது. முழு அளவிலான இன்ஜின் பரிசோதனைக்கு முன்பாக, நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட செமி-கிரையோஜெனிக் இன்ஜின் சோதனை மிக முக்கிய சாதனை என இஸ்ரோ கூறியுள்ளது.

சுமார் 15 மணி நேரம் நடந்த இந்த சோதனை வெற்றிகரமாக முடிந்தது. செமி-கிரையோஜெனிக் இன்ஜினின் இந்த பரிசோதனை அடுத்தகட்ட பரிசோதனைகளுக்கு வழிவகுத்துள்ளது.

இதன் மூலம் எதிர்காலத்தில் அதிக எடையுடன் கூடிய செயற்கை கோள்களை, இஸ்ரோ ராக்கெட் டுகள் கொண்டு செல்லும்.

## இணைய வழியில் வழக்கு தொடரும் வசதி - தலைமை நீதிபதி தொடங்கி வைத்தார்

**புதுடெல்லி**: இணைய வழியில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரும் வசதியை தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் நேற்று தொடங்கி வைத்தார். இந்த வசதி 24 மணி நேரம் கிடைக்கும் என அவர் கூறினார்

நாடு முழுவதும் இணைய வழி நீதிமன்றங்களும் இணைய வழியில் வழக்கு தொடரும் வசதியும் ஏற்படுத்தப்பட வேண்டும் என தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இந்நிலையில் உச்சநீதிமன்றத்தில் இணைய வழியில் வழக்கு

தொடரும் மேம்படுத்தப்பட்ட வசதியை (இ-ஃபைலிங் 2.0)அவர் நேற்று தொடங்கி வைத்தார்.




.

இதுகுறித்து நீதிமன்ற அறையில் நேற்று விசாரணை தொடங்குவதற்கு முன் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் கூறியதாவது: இ-ஃபைலிங் 2.0 வசதியை தொடங்கியுள்ளோம். இந்த வசதி 24 மணி நேரமும் கிடைக்கும். இணைய வசதிகள்இல்லாத மற்றும் தொழில்நுட்பம்பற்றி அறியாத வழக்கறிஞர்களுக்கு உதவிட இரண்டு சேவைமையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அனைத்து வழக்கறிஞர்களும் புதிய வசதியை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இ-சேவை மையங்கள் மூலம் ஒருவர் வழக்கு தொடர்வது மட்டுமின்றி பிற சேவைகளையும் பெறலாம். இ-ஃபைலிங் மென்பொருள் மூலம் நாட்டின் எந்தவொரு நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தில் உள்ள வழக்கின் நிலையை அறியலாம். இவ்வாறு தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் கூறினார்.

# வாரணாசி கியான்வாபி மசூதியில் கண்டுபிடிக்கப்பட்ட சிவலிங்கத்தை 'கார்பன் டேட்டிங்' செய்ய அலகாபாத் உயர் நீதிமன்றம் உத்தரவு



**வாரணாசி**: உத்தர பிரதேசத்தின் வாரணாசியில் புகழ்பெற்ற காசி விஸ்வநாதர் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயிலை ஒட்டி கியான்வாபி மசூதி உள்ளது.

இந்த சூழலில் கியான்வாபி மசூதி சுவரில் அமைந்துள்ள சிங்கார கவுரி அம்மனை வழிபட அனுமதிக்க வேண்டும் என்று கோரி கடந்த 2021 ஆகஸ்ட் 18-ம் தேதி 5 இந்து பெண்கள் வாரணாசி மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், கியான்வாபி மசூதியில் களஆய்வு நடத்த உத்தரவிட்டது. இதன்படி மசூதியில் ஆய்வு நடத்தப்பட்டு கடந்த ஆண்டு மே மாதம் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் மசூதியின் ஒசுகானாவின் நடுவே சிவலிங்கம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து கியான்வாபி மசூதியில் கண்டுபிடிக்கப்பட்ட சிவலிங்கத்தின் உண்மையான வயதை கண்டறிய 'கார்பன் டேட்டிங்' ஆய்வு நடத்த வேண்டும் என்று இந்து பெண்கள் சார்பில் வாரணாசி நீதிமன்றத்தில் முறையிடப்பட்டது. இதனை வாரணாசி மாவட்ட நீதிமன்றம் ஏற்கவில்லை.

இதை எதிர்த்து அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் இந்து பெண்கள் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கை நீதிபதி அரவிந்த் குமார் மிஸ்ரா விசாரித்து வருகிறார். கடந்த மார்ச் 20-ம் தேதி வழக்கு விசாரணைக்கு வந்தபோது சிவலிங்கத்துக்கு பாதிப்பு ஏற்படாமல் 'கார்பன் டேட்டிங்' ஆய்வு நடத்த முடியுமா என்பது குறித்து விரிவான பதில் அளிக்க இந்திய தொல்லியல் ஆய்வுத் துறைக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது தொல்லியல் துறை சார்பில் 52 பக்க அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில், சிவலிங்கத்துக்கு பாதிப்பு ஏற்படாமல் ‘கார்பன் டேட்டிங்’ ஆய்வை நடத்த முடியும் என்று உறுதி அளிக்கப்பட்டது.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி அரவிந்த் குமார் மிஸ்ரா, கியான்வாபி மசூதியில் சிவலிங்கத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் ‘கார்பன் டேட்டிங்’ ஆய்வு நடத்த உத்தரவிட்டார்.